**OS. No. 53 /2022**

P.W.2 - பிரபாகரன்

தேதி: 15.12.2023

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி ஜானகிராமன் எனக்கு உறவினர் ஆவார். அவர் பால்வியாபாரம் செய்து வருகிறார். நான் இராணிப்பேட்டையில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். எந்த தேதியில் வரைவோலை எடுத்தார்கள் மற்றும் எந்த தேதியில் ஒப்பந்தம் போட்டார்கள் என்று எனக்கு தெரியும். வாதி பெயரில் உள்ள ஒப்பந்தத்தை வாதியும் நானும் சேர்ந்து வாலாஜாவில் தயார் செய்தோம் என்றால் சரிதான். பிரதிவாதி வா.சா.ஆ.1 ஆவணத்தில் எத்தனை பக்கங்களில் கையொப்பம் போட்டார் என்று எனக்கு தெரியாது. ஆனால் கையொப்பம் போட்டார். எந்த புல எண்ணில் கட்டுப்பட்ட சொத்திற்கு ஒப்பந்தம் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் எவ்வளவு தொகைக்கு எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். கிரையதொகை ரூ.28,00,000/–த்திற்கு பேசப்பட்டது. அந்த தொகையை பிரதிவாதியிடம் வாதி கொடுத்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அந்த பணம் ரூ.23,00,000/– வாலாஜா ஸ்டேட் பாங்க்கிலிருந்து IDFC 1st Bank, Vellore க்கு இரண்டு வரைவோலைகளாக (DD) ஆக IDFC 1st Bank, Vellore வங்கியில் பிரதிவாதி வைத்திருந்த அடமானத்தை மீட்பதற்காக அந்த வங்கி பெயருக்கு கொடுத்தோம். வாதி பிரதிவாதிக்கு பணமோ, பிரதிவாதி பெயருக்கு வரைவோலையோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி மற்றும் நானும் சேர்ந்து பிரதிவாதியை மிரட்டி வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH